# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ரமேஷ் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | சின்னுசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 4.3.2024.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் காளிப்பட்டி பிரிவு ரோடு, வைகுந்தத்தில் குடியிருக்கிறேன். நான் வெல்சன் கம்பெனியில் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்னர் திரிவேணி கார் கம்பெனியில் கார் டிரைவராக வேலை செய்து வந்தேன். வழக்கில் இறந்துபோன சின்னுசாமி என்னுடைய அப்பா. என்னுடைய தகப்பானருக்கு 2 மகன்கள். நான் மற்றும் என்னுடைய அண்ணன் ஆஜர் 1ம் எதிரி சந்திரசேகர். ஆஜர் 2ம் எதிரி

சிவபிரகாசம் என்னுடைய அண்ணனின் மைத்துனர் ஆவார். ஆஜர் 3ம் எதிரி 2வது எதிரியின் நண்பர் ஆவார். என் அண்ணனுக்கு 2015ல் திருமணம் ஆனது. அதன் பின்னர் 2 வருடம் கழித்து அவர் தனியாக ஒரே வீட்டில் வேறு ஒரு அறையில் குடும்பத்துடன் குடியிருந்தார். நான் என் அப்பாவுடன் அதே வீட்டில் மற்றொரு அறையில் குடியிருந்து வந்தேன். என்னுடைய அம்மா குழந்தையம்மாள் சம்பவத்திற்கு 8 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். என்னுடைய அப்பா டி.வி. ரிப்பேர் பார்ப்பது மற்றும் நியூஸ் பேப்பர் ஏஜண்டாக இருந்து வந்தார். சம்பவத்தின்போது எனக்கு திருமணம் ஆகவில்லை. என் அண்ணன் தறி ஓட்டும் வேலை செய்து வந்தார். என் அப்பாவிற்கு சொந்தமாக 27 செண்ட் காலி நிலம் நாங்கள் குடியிருந்து வந்த வீட்டிற்கு அருகில் இருந்தது. அந்த நிலத்தை விற்று பணம் தருமாறு கேட்டு என் அண்ணன் அடிக்கடி என் அப்பாவிடம் தகராறு செய்து வந்தார்.

18.05.2018ம் தேதி காலை 8.30 மணி அளவில் எப்போதும் போல நான் வேலை செய்யும் சங்ககிரி திரிவேனி கார் கம்பெனிக்கு வேலைக்கு சென்றுவிட்டேன். மதியம் கார் டெலிவரிக்காக குமரிநல்லிபாளையம் சென்றுவிட்டு மீண்டும் 1.00 மணி அளவில் வீட்டிற்கு வந்து என் அப்பாவை பார்த்துவிட்டு, அவருக்கு தண்ணீர் கொடுத்துவிட்டு மீண்டும் வேலைக்கு சென்றுவிட்டேன். மறுபடியும் இரவு வேலை முடித்து 10 மணி அளவில் வீட்டிற்கு வந்தேன். அப்போது வீடு பூட்டப்படாமல் கதவு சாத்தப்பட்டிருந்தது. நான் கதவை திறந்து வீட்டிற்குள் சென்று லைட் போட்டு பார்த்தபோது என் அப்பா மல்லார்ந்த நிலையில் மூச்சு பேச்சு

இல்லாமல் இருந்தார். எனக்கு பதற்றமாக இருந்தது. உடனே நான் என் மாமா செல்வராஜ் என் நண்பர்கள் ஜெயகுமார், மணிகண்டன் ஆகியோரை போன் மூலம் வரச்சொன்னேன். நாங்கள் அனைவரும் என் அப்பாவை அருகில் சென்று பார்த்தபோது அவருக்கு மூக்கில் காயமும் கழுத்தில் இடதுபுறம் காயமும் இருந்தது. அதன்பின்னர் காந்தி நகரை சார்ந்த பொன்னுசாமி என்பவர் இரவு 12.05 மணிக்கு வந்து நேற்று மாலை 3.00 மணிக்கு என் அப்பாவின் வீட்டிற்கு வந்ததாகவும் அப்போது அவரிடம் என் அப்பா தென்னை மரத்தில் மட்டையை வெட்டி வரச்சொன்னதாகவும் அப்போது என் அண்ணன் மற்றும் அவருடன் 2 நபர்கள் வீட்டிற்கு வந்து போனார்கள் என்றும், அப்போது அவர் மட்டையை வெட்டிவிட்டு கீழே வரும்போது என் அப்பாவின் வீட்டிற்குள் இருந்து அலறல் சத்தம் கேட்டது என்றும் சொன்னார். என் அப்பா அவரது வீட்டில் துணி வைக்கும் அலமாரியில் வைத்திருந்த வீட்டு பத்திரத்தை நான் பார்த்தபோது அந்த பத்திரத்தை காணவில்லை. அதனால் நான் என் அண்ணன் மற்றும் அவருடன் வந்த 2 நபர்கள் மீது சந்தேகப்பட்டு சங்ககிரி காவல்நிலையம் வந்து அதிகாலை 12.30 மணிக்கு உறவினர்களுடன் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுதான் நான் அளித்த புகார் மனு ஆகும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம்தான் என் அப்பா அலமாரியில் வைத்திருந்து சம்பவத்தன்று காணாமல் போன பத்திரம் ஆகும். மேற்படி பத்திரம் சா.பொ.1 ஆகும். போலிசார் என்னை

விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை;</u>

நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் டிப்ளமா படித்திருக்கிறேன். என் வீட்டிலிருந்து காந்தி நகர் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்குமா என்றால் அரை கிலோ மீட்டர் இருக்கும். என் வீட்டிலிருந்து சங்ககிரி காவல்நிலையம் 8 கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரி. நான் அளித்த புகாரில் 12.05 மணிக்கு காந்தி நகரிலிருந்து பொன்னுசாமி வந்தார் என்றும் அவர் அலறல் சத்தம் கேட்டதாக சொன்ன விவரத்தை சொல்லவில்லை என்றால் சரி. என் வீட்டிற்கும் பைபாசிற்கும் 25 மீட்டர் இருக்குமா என்றால் இருக்கும். அதுபோல் சர்வீஸ் ரோடு வீட்டு வாசலிலேயே உள்ளது என்றால் சரி. என் வீட்டை சுற்றி 7,8 வீடுகள் இருக்கும் என்றால் சரியல்ல, 4,5 வீடுகள் இருக்கும். என் வீட்டிற்கு அருகில் எப்போதும் ஜன நடமாட்டம் இருக்கும் என்றால் சரி. 10.00 மணிக்கு என் அப்பாவை பார்த்தபின்னர் 12.30 மணிக்குதான் நான் சங்ககிரி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரி. எனது உறவினர் செல்வராஜ் மற்றும் நண்பர்களை போன் மூலமாக அழைத்ததாக கூறி உள்ள நிலையில் என்னுடைய போன் நெம்பர் மற்றும் அவர்களுடைய போன் நெம்பர்களை போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. புகார் மனுவை யார் எழுதினார்கள் என்றால் என் நண்பர் எழுதினார். என்னுடைய அண்ணனுக்கு திருமணம் ஆனபின்னர் ஒரே வீட்டில் கூட்டு குடும்பமாக இருந்தோமா

என்றால் தனியாக இருந்தோமா என்றால் முதலில் கூட்டு குடும்பமாக இருந்தோம். அதன்பின்னர் என் அண்ணன் அதே வீட்டில் தனி அறைக்கு சென்றுவிட்டார். கூட்டு குடும்பமாக இருந்தபோது எனக்கோ என் அண்ணனுக்கோ, அண்ணிக்கோ அப்பாவிற்கோ சொல்லிக்கொள்ளும்படி உறவுமுறை இல்லை என்றால் ஒரு வருடம் வரை நன்றாக இருந்தார்கள். அதன்பின்னர்தான் பிரச்சனை ஏற்பட்டது.

நான், என் அப்பா, என் அண்ணன் ஆகியோர் 2012 ல் ஒரு பாகபிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரி. ஆனால் வீட்டை மட்டும்தான் பாகம் செய்து கொண்டோம். நான் சொல்லும் 27 செண்ட் நிலம் சம்பவத்தின்போது பேங்க் அடமானத்தில் இருந்தது என்றால் சரி. 2012 ல் ஏற்பட்ட பாகபிரிவினை படி என் அப்பாவிற்கு 36-3/4 முக்கால் நிலமும் எனக்கும் என் அண்ணனுக்கும் 2500 சதுரடி நிலமும் ஒதுக்கி பாகம் செய்து கொண்டோம் என்றால் சரி. அந்த பாகப்பத்திரம்தான் சா.பொ.1 பத்திரம் என்றால் சரி. என் வீட்டை சுற்றி உள்ள நபர்கள் யாரும் என் அண்ணனும் மற்ற எதிரிகளும் வந்ததாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரி. 2018 ல் எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரி. 27 செண்ட் நிலம் பேங்க் அடமானத்தில் உள்ள விவரம் எனக்கும் என் அண்ணனுக்கும் என் அப்பாவிற்கும் தெரியும் என்றால் சரி. சம்பவ சமயத்தில் எனக்கு திருமணம் ஆகவில்லை, தொடர்ச்சியாக பெண் கேட்டு கிடைக்கவில்லை என்ற மன உளைச்சலில் அவராகவே தூக்கி மாட்டிக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் எனக்கு ஒதுக்கிய பாகம் குறைவாக உள்ள காரணத்தால்

துர்லாபம் அடைய வேண்டி என் அண்ணன் மீது பொய் புகார் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால்தான் பக்கத்தில் உள்ள நபர்கள் என் அண்ணனும் மற்ற எதிரிகளும் சம்பவத்தின்போது வந்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.